IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.
C.C.NO.79/2026
DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | MANJUNATHAN |
| FATHER'S NAME | : | SOUNDARRAJAN |
| VILLAGE | : | VEPPUR |
| OCCUPATION | : | SI |
| AGE | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of JULY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருவலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 19.04.2026 ம் தேதி மாலை 17.00 மணிக்கு நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் மனவாளன் மற்றும் தலைமை காவலர் செந்தில்குமார் ஆகியோர் ரோந்து பணி மேற்கொண்டு திருவலம் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டம் ஒழுங்கு, குற்ற தடுப்பு, மதுவிலக்கு, கஞ்சா மற்றும் குட்கா சம்மந்தமாக கண்காணித்து கொண்டு போகும்போது கிடைத்த தகவலின் பேரில் திருவலம் பொன்னை கூட்ரோட்டிடம் சென்று பார்க்க ஒரு நபர் சந்தேகப்படும்படியாக இருசக்கர வாகனத்தின் டேங்க் மீது ஒரு வெள்ளை நிற பாலிதீன் பையில் எதையோ வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தவர் போலிசாராகிய எங்களை கண்டதும் இருசக்கர வாகனத்தை ஸ்டார்ட் செய்து தப்பி செல்ல எத்தனித்தவரை நாங்கள் போலிஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து பெயர் விலாசம் பற்றி விசாரிக்க கோபால், த/பெ. கிருஷ்ணன், வாலாஜா என்று கூறினார். மேலும் இருசக்கர வாகனத்தின் டேங்க் மீது வெள்ளை நிற பாலித்தீன் பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் தலா 180மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY-10 பாட்டில்கள், 2)MCLONE BRANDY 17 பாட்டில்கள், 3)MONITOR GOLD RUM-4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் இருந்தது. அதை பற்றி அவரிடம் விசாரிக்க அரசு மதுபான கடையிலிருந்து ஏற்கனவே வாங்கி வைத்திருந்த மதுபான பாட்டில்களை எடுத்து வந்து அரசு அனுமதியின்றி தனது சுயலாபத்திற்காக கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். மேற்படி நபரை கைது செய்வதற்கான காரணத்தை கூறி மாலை 17.15 மணிக்கு கைது செய்து பின்னர் சம்பவ இடத்தில் தனிநபர்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் என்னுடன் இருந்த போலிசார் முன்னிலையில் மாலை 17.30 மணிக்கு தலா 180மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY-10 பாட்டில்கள், 2)MCLONE BRANDY 17 பாட்டில்கள், 3)MONITOR GOLD RUM-4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் மற்றும் TN 05 AT 2298 என்ற பதிவு எண் கொண்ட Honda Accent இருசக்கர வாகனம் ஒன்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு சொத்துகள் மற்றும் எதிரிகளுடன் நிலையம் வந்து எதிரியின் மீது வழக்கின் தன்மைபடி நிலைய குற்ற எண் 61/2026, சட்டப்பிரிவு

4(1)(A), 4(1)(C) TNP AMENDMENT ACT ன் படி வழக்கு பதிவு செய்து கொண்டேன். அந்த முதல் தகவல்அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் முதல் தகவல் அறிக்கையை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். எதிரியை பிணையில் விடுவித்தேன். பின்னர் வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் TN 05 AT 2298 என்ற பதிவு எண் கொண்ட Honda Accent இருசக்கர வாகனம் **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY 180மிலி அளவு கொண்டது–10 பாட்டில்கள் **அ.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. MCLONE BRANDY 180மிலி அளவு கொண்டது– 17 பாட்டில்கள் **அ.சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. MONITOR GOLD RUM 180மிலி அளவு கொண்ட–4 பாட்டில்கள் **அ.சா.பொ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எனது புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவு 4(1)(A), 4(1)(C) TNP AMENDMENT ACT படி 19.04.2026 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

ரோந்து பணிக்கு செல்லும் போது ஜிடியில் பதிவு செய்வோம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 3ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து 180மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY–10 பாட்டில்கள், 2)MCLONE BRANDY 17 பாட்டில்கள், 3)MONITOR GOLD RUM–4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் மற்றும் TN 05 AT 2298 என்ற பதிவு எண் கொண்ட Honda Accent இருசக்கர வாகனம் ஒன்றை கைப்பற்றினோம். வழக்கு சொத்தை கைப்பற்றும்போது உரிய சட்ட நடவடிக்கையான வீடியோ பதிவு இந்த வழக்கில் எடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பாலித்தீன்பையை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் பாலித்தீன் பையை கைப்பற்றி இருப்போம் என்றும், சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை ரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். உரிய சட்டவடிக்கை பின்பற்றாமல் வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. தனிநபர் சாட்சிகள் யாரையும் சேர்க்காமல் என் கீழ் பணிபுரியும் நபர்களை வைத்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்கின் புலன் விசாரணை மற்றும் புகார்தாரர் நான் என்பதால் எனது புலன் விசாரணை சந்தேகத்திற்குரியது என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன நேரம் தேதியில், இடத்தில் சம்பவம்நடக்கவில்லை என்றும், எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 15.07.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU
Digitally signed by S K P DILIP BABU
Date: 2026.07.15 17:17:59 +0530

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.